ந. ரங்கசாமி
**முதலமைச்சர்**
புதுச்சேரி அரசு

பாண்டிச்சேரி

தேதி: 30.08.201

## ரமலான் வாழ்த்துச் செய்தி

புதுச்சேரி மாநில மக்களுக்கு குறிப்பாக இசுலாமிய சகோதர சகோதரிகளுக்கு எனது உளங்கனிந்த ரமலான் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**'ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடமை, வைத்திருக்கும் வண்கண வர்'** என்பது வள்ளுவம். இல்லாதவர்களுக்கு ஒரு பொருளை கொடுத்து உதவுவதால் கொடுப்பவரும் பெறுபவரும் ஒரே நேரத்தில் மகிழ்ச்சி அடைகின்றனர். 'ஈதல்' என்பதும் ஒருவகை இன்பமாகும்.

**ஈகைத் திருநாள்** என்று சிறப்புடன் அழைக்கப்படும் இந்த ரம்லான் திருநாள், தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது. இருப்பவர் மட்டுமல்லாது, இல்லாத ஏழை, எளியவரும் இந்நாளை இன்பமுடன் கழிக்க வேண்டும் என்பதுதான் இப்பெருநாளின் சிறப்பு.

**ஈதல் இசைபட வாழ்தல்** என்னும் மானுட வாழ்வின் மகத்தான நோக்கத்தை ரமலான் பண்டிகை நமக்கு உணர்த்துகிறது. "மனித நேயம்" என்பதற்கு ஈகைப் பண்பும் இரக்கச் சிந்தனையுமே சிறந்த சான்றுகளாகும்.

இந்தப் புனித நன்னாளில் மனித நேயத்தைத் தொடர்ந்து பேண உறுதியேற்போம் என்று கூறி அனைவருக்கும் எனது உளங்கனிந்த ரமலான் நல்வாழ்த்துக்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன்.

(ந. ரங்கசாமி)

© அலு.: 2333399, 2335530, 2335328, 2335522 தொலைநகலி: 0413-2333135 இல்லம்: 2271232